Click Here to Learn more : https://bit.ly/3reqFLT



# இந்து மத இணைப்பு

## 1. இந்து மதம் – தோற்றமும் வரலாறும்

- **மதம் என்றால் என்ன?** — இவ்வுலகிலுள்ள மனிதர்கள் அனைவரும் துன்பத்தை வெறுத்து, இன்பத்தை அடைய விரும்புகின்றனர். அவ்வின்பமும் நீடித்து நிலைபெற்று இருக்க வேண்டுமென்பது அவர்களது விருப்பம்.
- மக்கள் அனைவரும் தங்கள் வாழ்நாட்களில், சிறிது காலம் இன்பத்தையும், சிறிது காலம் துன்பத்தையும் மாறிமாறி அனுபவித்து வருவதை நாம் காண்கிறோம்.
- இவ்வாறு உலகப்பொருள்கள் வழியாக மக்கள் அனுபவிக்கும் இன்பம் **சிற்றின்பம்** எனப்படும்.
- உலகப்பொருள்கள் அனைத்தும் அழியுந்தன்மையுடையனவாதலால் சிற்றின்பமும் என்றும் நிலைபெற்று நில்லாது அழிந்துவிடுகிறது.
- என்றும் நிலை பெற்று நின்று இடையறாது அனுபவிக்கத்தக்க இன்பம் ஒன்று உளது. அவ்வின்பம் **பேரின்பம்** எனப்படும். இப்பேரின்பத்தை மக்கள் அனுபவிக்கப் பெரியோர்கள் இறைவன் அருளோடு வகுத்த வழியே **மதமாகும்.**

### மதம்-பெயர்க்காரணம்

- சில மதங்கள் அம்மதத்தினர் வழிபட்டு வரும் கடவுள் பெயரால் அமைந்துள்ளன. உதாரணம்: சைவம், வைணவம் முதலியன. வேறு சில மதங்கள் அதனை நிறுவியவர் பெயரால் அமைந்துள்ளன. உ-ம்: பௌத்தம், ஜைனம் முதலியன.
- சில மதங்கள் அம்மதத்திற்குரிய தலைசிறந்த நூலின் பெயரால் அமைந்துள்ளன.
உ-ம்: வேதாந்தம், ஸ்மார்த்தம் முதலியன.

### இந்து மதம் என்பதன் பொருள்

- ஆரியர்கள் சிந்துநதி தீரத்தில் வசித்து வந்தபோது அவர்களை “சிந்துக்கள்” அல்லது இந்துக்கள் எனப் பாரசீகரும், கிரேக்கரும் அழைத்து வந்தனர் என்றும், அந்த சிந்துக்களுடைய மதமே இந்து மதம் என ஆயிற்று என்றும் சரித்திர ஆசிரியர்கள் சிலர் கூறுகின்றனர். இந்திய நாட்டினரின் மதமே இந்து மதம் எனப் பொருள் கூறுவாரும் உளர்.
- ஒரு நாட்டின் பெயராலோ, ஒரு ஆற்றின் பெயராலோ நமது ஒப்புயர்வற்ற மதம் ஏற்பட்டது என்பது பொருத்தமற்றது. ஆதலால் இதன் உண்மைப் பொருளை அறிய வேண்டுவது அவசியமாயிற்று.
- இந்து மதம் எனும் பெயர் அதன் கொள்கையை மேற்கொண்டு வந்ததாகும் இந்து அல்லது ஹிந்து என்ற சொல்லை ஹிம்+து எனப் பிரிக்கலாம். (ஹிம் = ஹிம்சையில் து = துக்கிக்கிறவன்).
- ஓர் உயிர் எந்தக் காரணத்தினாலாவது வருந்துவதாயிருந்தால், அதற்காக வருந்தி அத்துன்பம் தனக்கு வந்ததாய்க் கருதி அதை அகற்ற எவன் ஒருவன் பணிபுரிகிறானோ அவனே இந்து ஆவான். அப்பண்பு வாய்ந்த மக்களைக் கொண்ட மதமே இந்து மதமாகும்.



Click Here to Learn more : https://bit.ly/3reqFLT

Click Here to Learn more : https://bit.ly/3reqFLT



இக்கருத்தை

**ஹிம்ஸாயாம் தூயதேய : ஸ : ஹிந்து :**
**இத்யபி தீயதே**

என்ற சுருதி வாக்கியத்தாலும் அறியலாம். இதிலிருந்து இந்து மதம் என்பதற்கு, 'அன்பு மதம்', எனப் பொருள் கொள்ளலாம்.

- "அஹிம்ஸா பரமோதர்ம." மேலான அறம் எனப்படுவது அஹிம்சையே. அஹிம்ஸையாகிய அரும்பு அன்பாகிய மலராக மலர்கிறது. அன்பிற்கு அடிப்படை அஹிம்ஸையே ஆகும்.
- அன்பே கடவுள். இறைவன் எல்லா உயிர்களிடத்தும் நீங்காது உறைகிறான். எல்லா உயிர்ப் பிராணிகளுடைய உடம்பையே அவன் கோயிலாகக் கொண்டிருக்கிறான்.
- ஆதலால், எந்த உயிரின் உடலுக்கும் துன்பம் நேராவண்ணம் அவைகளிடத்து அன்பு செலுத்தினால் அன்புருவாய ஆண்டவனது அருள் பெறலாம்.

**"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே"**

எனத் திருமந்திரம் கூறுகின்றது.

- இந்து மதம் என்பதற்கு "சநாதன தர்மம்" என வேறு ஒரு பெயர் கூறுவாரும் உளர். இதற்கு 'அழிவிலா அறம்' என்பது பொருள். அன்றியும் திருநெறி, அருள்நெறி, தவநெறி, மெய்ந்நெறி, சன்மார்க்கம் என்பன போன்ற பல பெயர்களை இட்டு வழங்குவாரும் உளர்.
- மதத்தைச் சமயம் எனவும் கூறுவர். சமயம் என்பதில், சமை என்பது பகுதி. இதற்கு உடம்பை வளர்ப்பதற்கு உணவுப் பொருட்களைச் சமைப்பது போல இறைவனை அடைவதற்கு உரிய சாதனங்களைச் சமைப்பது அல்லது பக்குவப்படுத்துவது என்பது பொருளாகும்.
- சமயம் நமது கண்ணால் காணப்படும் உலகத்தையும், அனுமானத்தால், அறியத் தகுந்த ஆன்மாவினையும், இறைவனையும் இனிது காட்டும் ஞான ஒளி. மனிதனுடைய உடல் நலத்திற்கும் உள நலத்திற்கும் உதவும் அமுதம்.
- மனிதர் அன்போடு அளவளாவி வாழ்வதற்குரிய வழிகளை வகுக்கும் ஒழுக்கப் பீடம். மனிதர்களுடைய இகபர வாழ்விற்குரிய நலன்கள் அனைத்தையும் அருளும் கற்பக மரம்.

## இந்து மதச் சிறப்புகள்

- இந்து சமயமானது வேதங்களையும், தொடர்ந்து வந்த உபநிடதங்கள் மற்றும் காலங்காலமாகப் பல்வேறு குருக்களின் அறிவுரைகளையும் ஆதாரமாகக் கொண்ட ஆன்மிக அடிப்படையில் கட்டுண்டுள்ளது.
- வேதம், தத்துவங்கள், பக்தியோகம், கர்மயோகம், ஞானயோகம், யோகா மற்றும் தந்திர ஆகமப் பிரிவுகள் அனைத்தும் 'இந்து சமயம்' என்ற ஒரே கடலில் சங்கமமாகின்றன.

### யோக தர்மம்

- இந்து சமயத்தில் பலவகையான தர்மங்கள் பின்பற்றப்பட்டு வருகின்றன. அவற்றுள் பக்தியோகம், கர்மயோகம், ஞானயோகம் ஆகியவை முக்கியமானவை. மேற்கண்ட யோகங்கள் பகவத்கீதை மற்றும் யோகசூத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.



Click Here to Learn more : https://bit.ly/3reqFLT

Click Here to Learn more : https://bit.ly/3reqFLT



**தத்துவங்கள்**

- மீமாம்சம், சாங்கியம், வைசேடிகம், நியாயம்,அளவை, வேதாந்தம், சித்தாந்தம், அத்வைதம், விசிஷ்ட்டாத்துவைதம், துவைதம், சைவ சித்தாந்தம்

**நான்கு இலக்குகள்**

- இந்துக்கள் அடைய வேண்டிய நான்கு இலக்குகளாவன: அறம், பொருள், இன்பம், வீடு.

**அறம்**

- அறம் என்பது ஒருவர் சமூகத்தில் எவ்வாறு நடக்க வேண்டும் என்பதைக் குறிக்கும் ஒழுக்க நெறியாகும். ஒழுக்க நெறிகள் என்பவை சமூகம், மெய்யியல், சமயம், தனிமனிதரின் மனசாட்சி போன்றவற்றால் வரையறுக்கப்படுகின்றன.

**பொருள்**

- இவ்வண்டத்தில் அடங்கியுள்ள அனைத்தும் பொருட்களால் ஆனவை. இப்பொருட்களில் உண்டாகிற யாந்திரிக, பௌதீக, இரசாயன, உடலியல் வகைப்பட்ட நிகழ்வுகள் அனைத்தும் பொருள்வகைப் புலப்பாடு எனப்படுகின்றன.

**இன்பம்**

- இன்பம் என்பது வாழ்வின் முதன்மைக் குறிக்கோள்களில் ஒன்றாகும். இன்பத்திற்கு புறக்காரணிகள் முக்கியக் கூறுகளாக அமைந்தால் அது ஓர் அக உறுதிப் பொருளேயாகும்.

**வீடு**

- வீடுபேறு அல்லது மோட்சம் என்பது இந்தக் கருத்துருவில் 'சொர்கம் புகுதல்' எனப் பொருளுடையதாகும். கர்மயோக வாழ்க்கையில் பக்குவப்பட்ட பின்னரே அவர் துறவு வாழ்க்கைக்குத் தயாராகிறார். துறவு வாழ்க்கையில் பக்குவப்பட்டு இறுதி இலக்கான வீடுபேறு என்னும் மறுபிறவி இல்லாத விதேக முக்திநிலையை அடைகிறார்.

**இந்துசமய நூல்கள்**

- நான்கு வேதங்கள், உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம், பகவத்கீதை, இதிகாசங்கள், பாகவதம், புராணங்கள், மனுதர்ம சாத்திரம், ஆகமங்கள்.

**இந்துமதப் பிரிவுகள்**

சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என ஆறு பிரிவுகள் உள்ளன.

| | | |
|---|---|---|
| சைவம் | : | சிவனை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயமாகும். |
| வைணவம் | : | திருமாலை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயமாகும். |
| சாக்தம் | : | உமையம்மையை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயமாகும். |
| காணாபத்தியம் | : | கணபதியை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயமாகும். |
| கௌமாரம் | : | முருகனை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயமாகும். |
| சௌரம் | : | சூரியனை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயமாகும். |

**வர்ணங்கள்**

| | | |
|---|---|---|
| பிராமணர் | : | மிகு சாத்வீகம் (சத்துவ குணம்) |
| சத்திரியர் | : | குறை சாத்வீகம் (அதிக ராஜசீகம், குறை தாமாசீகம்) |



Click Here to Learn more : https://bit.ly/3reqFLT

Click Here to Learn more : https://bit.ly/3reqFLT



வைசியர் : சாத்வீகமற்றவர் (குறை ராஜசீகம், அதிக தாமாசீகம்)

சூத்திரர் : சாத்வீகமற்றவர், ராஜசீகமற்றவர், தாமாசீகம் மட்டும் உண்டு.

**குணங்கள்**

சத்துவ குணம் : அமைதி

இராட்சத குணம் : மூர்க்கம் மற்றும் ஆர்வமிக்கவர்

தாமச குணம் : சிரத்தையற்ற, மந்த குணம்


**ஆசிரமம்**


பிரம்மச்சரியம், கிரகஸ்தம், வனப்பிரஸ்தம், சந்நியாசம்.

**முப்பிரிவு**

| | | |
|---|---|---|
| அயன் | படைப்பவன் | பிரம்மா |
| அரி | காப்பவன் | திருமால் |
| அரன் | அழிப்பவன் | சிவன் |

**இந்து சமயக் குறியீடுகள்**

தாமரை - 

ஓம் - 

தீபம் - 

சுவஸ்திகா - 

திரிசூலம் - 



## 2. வேதங்கள்

உலகிலுள்ள ஒவ்வொரு மதத்திற்கும் முக்கியமான சமய நூல் ஒவ்வொன்றுள்ளது. நமது இந்து மதத்திற்கு வேதம், ஆகமம், தோத்திரம் சாத்திரம், இதிகாஸம், புராணம் எனப் பல நூல்கள் இருக்கின்றன.

**வேதம்**

- வேதம் என்ற சொல்லின் பகுதி வித்- என்பதாகும். வித் என்றால் அறிவு, வேதம் என்பதற்கு அறிவுநூல் என்பது பொருள்.
- தெய்வீகமான கருத்துகளைக் தன்னுள் அடக்கி மறைத்து வைத்திருப்பதால் அது மறையெனப் பெயர்பெற்றது. ஆசிரியனிடம் கேட்டுத் தெளியவேண்டிய நூலாதலால் இதனைச் சுருதியெனவும் கூறுவர். இதனை ரிக், யஜூர், சாமம், அதர்வணம் என நான்காக வியாசர் வகுத்துள்ளார்.



Click Here to Learn more : https://bit.ly/3reqFLT

Click Here to Learn more : https://bit.ly/3reqFLT



**வியாசர்**

- ‘வியாசம்’ என்ற சொல்லிற்கு ‘பகுத்தல்’ என்று பொருளாகும். வியாசர் என்னும் சொல் பதவியைக் குறிக்க வந்தது. வியாசம் செய்பவர் ‘வியாசர்’ என்று அழைக்கப்படுவார்.
- சதுர்யுகம் — கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம்.
- துவாபரயுகம் வரையிலும் வேதங்கள் பிரிவுகள் ஏதுமின்றி ஒரே தொகுப்பாக விளங்கும். ஒவ்வொரு துவாபர யுகத்திலும் ஒரு மாமுனிவர் தோன்றி வேதங்களை (ரிக், யஜூர், சாம, அதர்வணம்) நான்காகப் பிரிப்பார். அம்முனிவரே ‘வியாசர்’எனப்படுவார்.
- 71 சதுர் யுகங்கள் - 1 மன்வந்திரம்.
- நாம் இருப்பது 28-ஆம் சதுர்யுகம் ஆகும். தற்பொழுது நடப்பது வைவசுவத மன்வந்திரம் ஆகும். இதுவரை 28 மாமுனிவர்கள் வியாசர் பதவியை வகித்துள்ளார்கள்.
- இந்த சதுர்யுகத்தில் பராசர முனிவரின் புதல்வரான ‘கிருஷ்ணத்துவைபாயனர்’ வேதங்களைப் பிரித்ததால் ‘வேதவியாசர்’ எனப் போற்றப்படுகிறார்.

ஒரு சதுர்யுகத்தின் இருநூறு வருடங்களை 80 + 60 + 40 +20 எனப் பிரித்து நான்கு யுகங்களாக்கினர் நம் முன்னோர்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| கிருதயுகம் | 21,600 × 80 | = | 17,28,000 | ஆண்டுகள் |
| திரேதாயுகம் | 21,600 × 60 | = | 12,96,000 | ஆண்டுகள் |
| துவாபரயுகம் | 21,600 × 40 | = | 8,64,000 | ஆண்டுகள் |
| கலியுகம் | 21,600 × 20 | = | 4,32,000 | ஆண்டுகள் |
| | மொத்தம் | = | 43,20,000 | ஆண்டுகள் |
| | 1 சதுர் யுகம் | = | 43,20,000 | ஆண்டுகள் |
| 71 சதுர் யுகங்கள் | | = | 1 மன்வந்திரம் | |
| 1 மன்வந்திரம் | | = | 30,67,20,000 | ஆண்டுகள் |
| 14 மன்வந்திரம் (994) சதுர்யுகங்கள் | | = | 2 கல்பம் | |
| 2 கல்பம் | | = | 429,40,80,000 | ஆண்டுகள் |
| 2 கல்பம் என்பது பிரம்மாவுக்கு ஒரு நாள் ஆகும். | | | | |
| 1000 சதுர் யுகங்கள் | | - | பிரம்மனின் ஒரு பகல் | |
| 2000 சதுர் யுகங்கள் | | - | பிரம்மனின் ஒரு நாள் | |
| பிரம்மனின் 360 நாட்கள் | | - | பிரம்மனின் ஒரு வருடம் | |
| பிரம்மனின் 100 வருடங்கள் | | - | பிரம்மனின் ஆயுள் | |

பிரம்மனின் ஆயுட்காலம் முடிந்தவுடன் பிரளயம் தோன்றி முடிந்தவுடன் ஒரு புதிய பிரம்மனுடன் ஒரு மனித வாழ்க்கைக் கணக்குப்படி, 311,040 பில்லியன் வருடங்கள். மகாயுகம், வருடம், மாதம், நாள் அனைத்துமே சித்திரை மாதத் துவக்கத்திலிருந்தே கணக்கிடப்படுகிறது. இந்தக் காலக் கணக்கை 1,500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இந்திய வானியல் மற்றும் கணிதவியல் அறிஞர் ஆர்யபட்டர் உறுதி செய்திருக்கிறார்.

தற்போதைய பிரம்மாவின் வயது 51.



Click Here to Learn more : https://bit.ly/3reqFLT

Click Here to Learn more : https://bit.ly/3reqFLT

www.surabooks.com

Click Here to Learn more : https://bit.ly/3reqFLT